# இயல் 6.11 - சுற்றளவு மற்றும் பரப்பளவு

பயிற்சி எண் :: 6.11.4.2.H

சுற்றளவு மற்றும் பரப்பளவு காணுதல் - பாடச்சுருக்கம் - தநாஅபு பயிற்சி - 3.2

## சுற்றளவு மற்றும் பரப்பளவு காணுதல் - பாடச்சுருக்கம் - தநாஅபு பயிற்சி - 3.2

1. ஒரு மூடிய வடிவத்தின் எல்லையின் நீளம் அவ்வடிவத்தின் சுற்றளவு எனப்படும்.

   a) சரி ✓ b) தவறு →




சுற்றளவு என்பது ஒரு மூடிய வடிவத்தைச் சுற்றியுள்ள அளவு ஆகும்.

மூடிய வடிவத்தின் சுற்றளவு $\}$ $= a + b + c + d + e$

2. செவ்வகத்தின் சுற்றளவு, $P = 2 \times (l + b)$ அலகுகள் ஆகும்.

   a) தவறு b) சரி ✓ →




செவ்வகத்தின் சுற்றளவு $\}$ $= l + b + l + b$

$= 2l + 2b$

$= 2 \times (l + b)$ அலகுகள்

3. சதுரத்தின் சுற்றளவு, $P = 4 \times a$ அலகுகள் ஆகும்.

   a) சரி ✓ b) தவறு →




சதுரத்தின் சுற்றளவு $\}$ $= a + a + a + a$

$= 4 \times a$ அலகுகள்

4. முக்கோணத்தின் சுற்றளவு, $P = (a + b + c)$ அலகுகள் ஆகும்.

   a) தவறு b) சரி ✓ →




முக்கோணத்தின் சுற்றளவு $\}$ $= (a + b + c)$ அலகுகள்

5. சமபக்கமுடைய ஓர் ஒழுங்கு வடிவத்தின் சுற்றளவு = பக்கங்களின் எண்ணிக்கை × ஒரு பக்கத்தின் அளவு.

   a) சரி ✓ b) தவறு →




சமபக்கமுடைய ஓர் ஒழுங்கு வடிவத்தின் சுற்றளவு $\}$ $= a + a + a + a$

$= 4 \times a$

= பக்கங்களின் எண்ணிக்கை × ஒரு பக்கத்தின் அளவு

6. ஒரு மூடிய வடிவத்தால் அடைபடும் பகுதி அதனுடைய பரப்பளவு எனப்படும்.

   a) தவறு b) சரி ✓ →



ஒரு மூடிய வடிவத்தின் பரப்பளவு என்பது அதன் எல்லைக்குள் ஓரலகுச் சதுரங்களால் அடைபட்ட பகுதி ஆகும்.

7. செவ்வகத்தின் பரப்பளவு, $A$ = நீளம் × அகலம் = $l \times b$ சதுர அலகுகள் ஆகும்.

   a) சரி ✓ b) தவறு →




செவ்வகத்தின் பரப்பளவு காணும் சூத்திரம் $\}$ = நீளம் × அகலம்

= $(l \times b)$சதுர அலகுகள்

8. சதுரத்தின் பரப்பளவு, $A$ = பக்கம் × பக்கம் = $a \times a$ சதுர அலகுகள் ஆகும்.

   a) தவறு b) சரி ✓ →




சதுரத்தின் பரப்பளவு காணும் சூத்திரம் $\}$ = பக்கம் × பக்கம்

= $(a \times a)$சதுர அலகுகள்

9. செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு, $A = \frac{1}{2}\ (b \times h)$ சதுர அலகுகள்.

   a) சரி ✓ b) தவறு →




செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு காணும் சூத்திரம் $\}$ = $\frac{1}{2}$ (அடிப்பக்கம் × உயரம்)

= $\frac{1}{2}\ (b \times h)$சதுர அலகுகள்

10. ஒரு கூட்டு வடிவத்தின் சுற்றளவானது, அவ்வடிவத்தின் அனைத்து வெளிப்பக்கங்களின் நீளங்களின் கூடுதலுக்குச் சமம்.

   a) தவறு b) சரி ✓ →




கூட்டு வடிவத்தின் சுற்றளவு $\}$ $= a + b + c + d + e + f$

= அனைத்துப் வெளிப்பக்கங்களின் நீளங்களின் கூடுதல்

11. ஒரு கூட்டு வடிவத்தின் பரப்பளவானது, அதை உருவாக்கிய ஒழுங்கு / எளிய வடிவங்களின் பரப்பளவுகளின் கூடுதலுக்குச் சமம் .

   a) சரி ✓ b) தவறு →




கூட்டு வடிவத்தின் பரப்பளவு $\}$ = செவ்வகத்தின் பரப்பளவு + சதுரத்தின் பரப்பளவு

## Information Rights & Disclaimers


Sum & solution prepared on Monday 16th May, 2022 :: 05:50 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**